# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 22 செவ்வாய்க்கிழமை 06.01.2026 கதிர் 431





## சந்தேகத்துக்கிடமான முறையில் ஐவர் உயிரிழப்பு!



### பெண்ணொருவர் கைது

வென்னப்புவ, ஜன. 06

வென்னப்புவ, வைக்கால - தம்பறவில பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை 5 பேர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளனர். மேலும் நால்வர் ஆபத்தான நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மதுபானம் எனக் கருதப்படும் திரவமொன்றே இந்த மரணங்களுக்குக் காரணம் எனத் தற்போது சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச்சம்பவம்தொடர்பில்தெரியவருவதாவது,

வென்னப்புவ, வாய்க்கால், தம்பரவில பகுதியில் உள்ள தொழிற்சாலை 7

# பிரதமர் ஹரிணி அமரசூரிய பதவி விலகப்போவதில்லை!

## ஆளுங்கட்சி உறுதிப்படுத்தல்



*கொழும்பு, ஜன. 06*

*பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவி விலகப்போவதில்லை என்று ஆளுங்கட்சி உறுதிப்படுத்தியுள்ளது.*

*“பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தனது பதவியில் இருந்து விலகப்போவதில்லை. அதற்குரிய எந்தவொரு தேவையும் தற்போது எழவில்லை.” –என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.*

*கல்விக் கட்டமைப்பைச் சீர்குலைத்துள்ள பிரதமர் பதவி விலக வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.*

*இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஆளுங்கட்சி எம்.பியான தேவானந்த சுரவீர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-*

*“நாட்டுக்கு, மாணவர் சமூகத்துக்குத் தீங்கு விளைவிக்ககூடிய வகையில் எந்தவொரு கல்வி மறுசீரமைப்பும் இடம்பெறமாட்டாது. நாட்டு மக்கள் எமக்கு வழங்கிய ஆணை என்னவென்பது எமக்குப் புரிகின்றது.* 7

## ஐ.தே.க. பிரதித் தவிசாளராக நவீன் திஸாநாயக்க நியமனம்



கொழும்பு, ஜன. 06

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தவிசாளராக முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்குரிய நியமனக் கடிதம் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் நவீன்திஸாநாயக்கவுக்கு வழங்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வகித்த 7




## “எடுக்காதே எடுக்காதே குப்பை வரி எடுக்காதே!”

### பொகவந்தலாவையில் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, ஜன. 06

நுவரெலியா, பொகவந்தலாவை நகரில் காணப்படும் குப்பைகளைச் சேகரிக்க நோர்வூட் பிரதேச சபை அதிக வரி அறவிடுதாகத் தெரிவித்து பொகவந்தலாவை வர்த்தகர்கள் இன்று காலை ஆர்ப்பாட்டத்தில் 7

## குடும்பத் தகராறு முற்றியதில் வீட்டுக்குத் தீ!

### தந்தை, தாய், மகள் மரணம்

அனுராதபுரம், ஜன. 06

அனுராதபுரம், கலென்பிந்துனுவெவ, படிகாரமடுவ பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற மிகத் துயரமான சம்பவத்தில் தந்தை, தாய் மற்றும் மகள் ஆகிய மூவர் உயிரிழந்துள்ளனர்.

குடும்பத் தகராறு முற்றிய நிலையில், கணவனால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீ வைப்புச் சம்பவத்தில் 43 வயதுடைய சமன் அநுருத்த பிரதீப்பிரிய (தீ வைத்தவர்), அவரது மனைவி பிரபாஷா சந்தமாலி (வயது 36), 13 வயதுடைய மகள் டிமல்கா 7




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# கதிர்காம ஆலயத் தங்கத்தை விற்கத் தீர்மானித்தது ஏன்?



கொழும்பு, ஜன.06

கதிர்காம ஆலயத்தின் பொறுப்பிலுள்ள தங்கக் கையிருப்பில் ஒரு பகுதியை விற்பனை செய்யத் தீர்மானித்தமைக்கான காரணம் குறித்து கதிர்காம ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே திலின மதுசங்க தெளிவுபடுத்தினார்.

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் கண்காணிப்பு விஜயமொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் கதிர்காம ஆலயத்திலுள்ள தங்கக் கையிருப்பில் ஒரு பகுதி நீரில் சிக்கியது. அவ்வாறு தங்கம் நீரில் சிக்கும் போது, ஏதேனும்ஒரு காரணத்தினால்அந்த தங்கம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டால் அதற்கு யார் பொறுப்பு கூறுவது? அதனால்தான் நான் இந்த முடிவை எடுத்தேன்.

இவ்வேளையில் அரசாங்கமும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகக்கூடும் என்பதால், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஏனைய திட்டங்களுக்கு உதவவே நாம் எதிர்பார்த்தோம். மாறாக இது அரசாங்கத்துடனான ஒரு டீலோ அல்லது ஜனாதிபதியுடனான டீலோ அல்ல. அப்படி இல்லை. ஜனாதிபதி குறைந்தபட்சம் என்னிடம் இதிலிருந்து உதவி செய்யுமாறு கோரிக்கை கூட விடுக்கவில்லை.

தங்கத்தை சரியான முறையில் விற்பனை செய்வேன், அதற்கான 100 வீத பொறுப்பை நான் ஏற்கிறேன். இந்தத் தங்கத்தை குறைந்த விலைக்கு விற்க இடமளிக்க மாட்டேன். 100 வீதம் சரியான விலைக்கே விற்கப்படும். அது குறித்து சமூக ஊடகங்கள் ஊடாக நான் அறிவிப்பேன்.

விற்பனை விலை, விற்பனை செய்வதாயின், பௌத்த விவகார ஆணையாளரின் அனுமதியுடன் விற்பனை செய்வதாயின், அதனை 100 வீதம் வெளிப்படைத்தன்மையுடன் செய்ய நான் எதிர்பார்க்கிறேன். எந்த வகையிலும் மோசடி செய்ய நான் எதிர்பார்க்கவில்லை.

நான் ஆலயத்தின் சொத்துக்களை அபகரிக்க முயற்சிப்பதாக யாராவது கூறினால், கடந்த நான்கு வருடங்களிலும் எனக்கு கிடைக்கும்பாதுகாவலர்கொடுப்பனவையோ, எந்தவொரு ஊதியத்தையோ நான் விஷ்ணு ஆலயத்திலிருந்து இதுவரை பெறவில்லை. நான் கதிர்காம ஆலயத்திலிருந்தும் பெறமாட்டேன்,” என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# நுண்கடன் பிரச்சினைக்கு புதிய சட்டமூலம்

கொழும்பு, ஜன.06

நுண்கடன் தொடர்பில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாரச்சி தெரிவித்துள்ளார். நுண்கடன் பெற்ற சுமார் 200 பெண்கள் இதுவரை தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாரச்சி இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் பெயர் மற்றும் சின்னத்தை தவறாகப் பயன்படுத்தி வைப்பாளர்களிடம் பல மில்லியன் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலியான கையடக்கத்தொலைபேசி செயலி (Mobile App) ஊடாக இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு பங்குச் சந்தையின் சிரேஷ்ட உப தலைவர் நிரோஷன் விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் இந்த மோசடி இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் போது இது குறித்து அதிக கவனம்செலுத்துமாறு வைப்பாளர்களிடம் கோரிக்கை விடுப்பதாக நிரோஷன் விஜேசுந்தர மேலும் குறிப்பிடடுள்ளார். (ஐ)

# சட்டவிரோத மதுபானம் அருந்திய ஐவர் உயிரிழப்பு?

*கொழும்பு, ஜன.06*

*வென்னப்புவ, மாரவில பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் அருந்தியதால் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் மூன்று நபர்களின் சடலங்கள் வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.*

*கவலைக்கிடமான நிலையில் இருந்த மேலும் இரண்டு பேர் வென்னப்புவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.*

*சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*



# மனநல நோய்க்கு சிகிச்சை பெற்றுவரும் தமிழ்நாடு மீனவர் சிறையில்! மனிதாபிமான முறையில் விடுவிக்குமாறு கண்ணீர் விடும் உறவினர்கள்



இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த 30ஃ12ஃ2026 அன்று கைது செய்யப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டவரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யக் கோரி மீனவரின் குடும்பத்தினர் மாவட்ட ஆட்சிய ரிடம் நேற்று பிற்பகல் கோரிக்கை விடுத்துள்ள னர்.

தமிழ்நாடு இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சென்று கடந்த 30ஆம் திகதி அதிகாலை எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து ஒரு மீன்பிடி படகையும் அதிலிருந்த மூன்று மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்தி எதிர்வரும் 13 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மீனவர் பிரபு மனநலம் பாதிக்கப்பட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும், நாளாந்தம் தூக்க மருந்து பாவிப்பவர் என்றும், கடந்த 3ம் திகதி மதுரையில் உளவியல் ரீதியாக சிகிச்சை பெற இருந்த நிலையில் கைது செய்யப்பட்டதாகவும் அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

தற்போது மீனவர் பிரபு தூக்க மாத்திரை பாவிக்காமலும், உடைகளை மாற்றாமல் உணவு உண்ணாமல் மன நலம் பாதிக்கப்பட்டவாறு இருப்பதாக உடன் இருக்கும் மீனவர்கள் தெரிவித்ததாக பிரபுவின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். (ஐ)

# விரிசல்கள் விழுந்த வீடுகளுக்குள் மீண்டும் வாழ்க்கை பரிதவிக்கும் கம்பளை மக்கள்



கம்பளை - குருந்துவத்த சமர்செட் தோட்டத்தில் வசிக்கும் மக்களின் வீடுகள் கடுமையான மண்சரிவால் பாதிக்கப்பட்டதன் காரணமாக, பத்து குடும்பங்கள் கடந்த ஒரு மாதமாக முகாம்களில் தங்கியிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

குருந்துவத்த சமர்செட் தோட்ட மக்களின் வீடுகளின் முன்புறங்களில் பெரிய அளவிலான மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன், பல வீடுகளில் பெரும் விரிசல்கள் காணப்படுகின்றன.

இதனால், அந்தப் பகுதியில் உள்ள தேயிலை தொழிற்சாலை முகாம்களில் அவர்கள் தற்காலிகமாக தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை எந்த அரச அதிகாரியும் சம்பவ இடத்திற்கு வந்து நேரில் ஆய்வு மேற்கொள்ளவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். மேலும், அரசாங்கம் வழங்க வேண்டிய நிதியுதவிகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

முகாம்களில் தங்கியுள்ள மக்களை வீடுகளுக்கு திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்திய அரச அதிகாரிகள், அதற்குப் பிறகு தேவையான உதவிகள் அல்லது மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை எனவும் மக்கள் கூறுகின்றனர். இதனால், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கடும் மனஅழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், முகாம்களில் குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை தேவைகள் எதுவும் இல்லை எனவும், அரசாங்கம் வழங்க வேண்டிய நிதியுதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் மக்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் பாதுகாப்பான மாற்று வசதிகள் வழங்கப்பட வேண்டும் என அவர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# பருத்தித்துறையில் லஞ்ச் சீற் பாவனை தடை முழுமையாக நடைமுறையில்!



பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் லஞ்ச் சீற் பாவனை தடை முழுமையாக நடைமுறையில் உள்ளது.

தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில், பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இணைந்து நேற்று இரவு உணவகங்களுக்கு நேரில் விஜயம் செய்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சகல உணவகங்களிலும் லஞ்ச் பாவனை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

குறித்த நடைமுறையை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறும் மீறும் உணவகங்களின் வியாபார உரிமத்தை இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதி உணவகங்களில் லஞ் சீற் பாவனைக்கு முற்றாக தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

மீறுவோரினது வியாபார உரிமம் ரத்துச் செய்யப்படுமெனவும் கடுமையான நடைமுறை கொண்டுவரப்பட்டிருந்தது.

குறித்த நடைமுறை ஏனைய சபைகளுக்கு முன்னுதாரணமாக அமைந்திருப்பது சுகாதார தரப்பினர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாக்குறுதிகளை மீறிய சுகாதார அமைச்சு தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் வைத்தியர்கள்



சுகாதார சேவை மற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தலையிடாத காரணத்தினால், அதற்கு எதிராக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட மத்திய குழுக் கூட்டம் நாளை (07) நடைபெறவுள்ளது.

குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுகாதார அமைச்சர் உள்ளிட்ட சுகாதார அமைச்சு வழங்கிய வாக்குறுதிகளை மீறி வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை நாளை கூடும் விசேட மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்க எதிர்பார்த்துள்ளதாக வைத்தியர் சமில் விஜேசிங்க மேலும் தெரிவித்தார். (ஐ)

# அசாத் சாலியின் காணியை அபகரித்த ரவி கருணாநாயக்க - சிஐடியில் முறைப்பாடு



ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி இந்த முறைப்பாட்டை நேற்று பதிவு செய்துள்ளார்.

கொழும்பு வெள்ள வத்தை யிலுள்ள 150 மில்லியன் ரூபா பெறுமதியான தமது காணியை மோசடியான முறையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கைப்பற்றியுள்ளதாக அசாத் சாலி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில், இந்த மோசடி தொடர்பில் ஏற்கனவே குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளதுடன், நேற்று இது தொடர்பான விசாரணைகளுக்காக சி.ஐ.டி. விடுத்திருந்த அழைப்பாணைக்கமைய வாக்குமூலம் ஒன்றை அளிப்பதற்காகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வருகை தந்திருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. எனினும், மூன்றாம் தரப்பினரைக் கொண்டு அங்கு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரியவருகிறது. இம்முறை இடம்பெறும் விசாரணைகள் மூலம் உரிய நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# தீபம் ஏற்றுவதால் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பது அர்த்தமற்றது: திருப்பரங்குன்றம் வழக்கில் ஐகோர்ட் மதுரை கிளை தீர்ப்பு வழங்கியது





திருப்பரங்குன்றம் மலையில் தர்கா அருகே தீபம் ஏற்றுவது தொடர்பான மேல்முறையீட்டு வழக்கில் ஐகோர்ட் மதுரை கிளை அமர்வு இன்று தீர்ப்பு வழங்கியது. திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தூணில் தீபம் ஏற்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டது செல்லும் என்று ஐகோர்ட் தீர்ப்பு அளித்துள்ளது.

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் மலை தூணில் தீபம் ஏற்றக் கோரி ராம.ரவிக்குமார் என்பவர் தொடர்ந்த வழக்கில் தீபம் ஏற்ற ஐகோர்ட் மதுரை கிளை தனி நீதிபதி சுவாமிநாதன் டிச. 1ம் தேதி உத்தரவிட்டார். இதை எதிர்த்து தமிழ்நாடு அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை ஐகோர்ட் கிளை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே. ராமகிருஷ்ணன் ஆகியோர் முன் நடைபெற்றது. டிச. 18ம் தேதி அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில், மேல்முறையீட்டு மனுவின் மீது தீர்ப்பளிப்பதாகக்கூறி நீதிபதிகள் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

இதனிடையே, திருப்பரங்குன்றம் மலையில் கந்தூரி விழா நடத்த தடை விதிக்கக்கோரி மாணிக்கமூர்த்தி என்பவர் ஐகோர்ட் மதுரை கிளையில் கடந்த 2ம் தேதி மனுத்தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி எஸ்.ஸ்ரீமதி, தர்கா தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டார். மேலும், கந்தூரி விழா நடத்தக்கூடாது எனவும், சந்தனக்கூடு நிகழ்வில் 50 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், ஐகோர்ட் மதுரை கிளையில் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் ஆகியோர் நேற்று காலை வழக்கமான வழக்குகளை விசாரித்தனர். அப்போது, திருப்பரங்குன்றம் தர்காவில் கந்தூரி விழா நடத்தக் கூடாது, 50 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டுமென்ற தனி நீதிபதி உத்தரவை ரத்து செய்யக் கோரி தர்கா தரப்பில் மேல்முறையீட்டு மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டுமென வழக்கறிஞர் பிரபு ராஜதுரை ஆஜராகி முறையிட்டார்.

அதற்கு நீதிபதிகள், "திருப்பரங்குன்றம் தீப விவகாரம் தொடர்பான மேல்முறையீட்டு மனுவின் மீது நாளை தீர்ப்பளிக்கப்படுகிறது. அதில் முறையீடு செய்யப்பட்டுள்ள விவகாரமும் இருப்பதால் அவசர வழக்காக விசாரிக்க வேண்டியதில்லை. தீர்ப்பில் உள்ளதை அறிந்து கொண்ட பின்னர் தேவைப்பட்டால் முறையீடு செய்யலாம்" என கூறியுள்ளனர்.

இந்நிலையில் மேல்முறையீட்டு வழக்கில் ஐகோர்ட் மதுரை கிளை அமர்வு இன்று தீர்ப்பு வழங்கியது. அந்த தீர்ப்பில் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தூணில் தீபம் ஏற்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் உத்தரவிட்டது செல்லும் என்று ஐகோர்ட் தீர்ப்பு அளித்துள்ளது.

கோயிலுக்கு சொந்தமான இடத்தில் தீபம் ஏற்றுவதால் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்பது அர்த்தமற்றது. அரசியல் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அரசு செயல்படக்கூடாது. தீபத்தூண் கோயிலுக்கு சொந்தமான இடத்தில்தான் உள்ளது. தீபமேற்றும் இடத்தை தர்காவிற்கு இடையூறு ஏற்படாத வகையில் மாற்றுவது குறித்து பரிசீலிக்க முந்தைய உத்தரவுகள் உள்ளன.

மாவட்ட நிர்வாகம் தீபம் ஏற்ற உதவி செய்ய வேண்டும். பொதுமக்கள் யாரும் தீபத்தூணில் தீபம் ஏற்ற கோயில் நிர்வாகத்துடன் செல்லக் கூடாது. தனிநபர் தீபம் ஏற்ற அனுமதிக்க முடியாது. தேவஸ்தானம், மாவட்ட நிர்வாகம், காவல்துறையினர்தான் தீபம் ஏற்ற வேண்டும் என்று தெரிவித்து மேல்முறையீட்டு மனுக்களை முடித்துவைத்தது. (ஐ)





மறு அறிவிப்பு வரும்வரை இந்தியர்கள் ஈரானுக்கு செல்வதைத் தவிர்க்குமாறு வெளியுறவு அமைச்சகம் உத்தரவு அளித்துள்ளது. விலைவாசி உயர்வு உள்ளிட்ட பொருளாதார நெருக்கடிகளால் ஈரானில் நடைபெறும் போராட்டத்தால் பதற்றம் நிலவுவதால், அங்கிருக்கும் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்கவும் அறிவுறுத்தியுள்ளது.

ஈரானில் வசிக்கும் இந்தியர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். போராட்டங்கள் நடைபெறும் இடத்திற்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள மேற்காசிய நாடான ஈரானில் விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்துள்ளது. கடந்த மாதம் 28ம் தேதி முதல் அங்குள்ள முக்கிய நகரங்களில் வணிகர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டம் தீவிரமடைந்த நிலையில், வன்முறையாக மாறியது. இதுவரை 15க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சமீபத்திய நிகழ்வுகளை கருத்தில் கொண்டு, இந்தியர்கள் மறு அறிவிப்பு வரும் வரை ஈரான் நாட்டிற்கு அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தற்போது ஈரானில் உள்ள இந்திய குடிமக்கள் மற்றும் இந்திய தகவல் தொடர்பு அதிகாரிகள் உரிய எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

போராட்டங்கள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்கு செல்வதைதவிர்க்க வேண்டும். மேலும் டெஹ்ரானில் தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகத்தின் இணைய தளத்தை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். ஈரானில் வசிக்கும் இந்தியர்கள், ஏற்கனவே பதிவு செய்யாமல் இருந்தால், இந்தியத் தூதரகத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐபோன் ஏற்றுமதியில் இந்தியா சாதனை



ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வெளியிட்ட அறிக்கை: 2025ஆம் ஆண்டு ரூ.4.51 லட்சம் கோடி மதிப்புள்ள ஐபோன்களை ஆப்பிள் நிறுவனம் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்துள்ளது. மின்னணு பொருட்களின் உற்பத்தி கடந்த 11 ஆண்டுகளில் 6 மடங்கு அதிகரித்துள்ளது. பிரதமர் மோடியின் தொலைநோக்கான தலைமையின் கீழ் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி 8 மடங்கு அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சியானது, இந்தியாவில் இருந்து அதிகம் ஏற்றுமதி செய்யப்படும் 3 பொருட்களில் ஒன்றாக மின்னணு பொருட்கள் அமைந்துள்ளது. இந்த ஆண்டு நான்கு செமி கண்டக்டர் தொழிற்சாலைகள் துவங்கப்பட உள்ளன. மின்னணு உற்பத்தித் துறையில் தற்போது 25 லட்சம் வேலைவாய்ப்புகள் உள்ளன. இந்திய அரசின் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தில் ஆப்பிள் நிறுவனம் இணைந்துள்ளது. இது நேரடியாகவும், மறைமுகமாகவும் 3 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை அளித்துள்ளது.

ஆப்பிள் நிறுவனத்துக்கு இந்தியாவில் 5 ஐபோன் தொழிற்சாலைகள் உள்ளன.


## இந்த ஆண்டின் முதல் சந்திரகிரகணம் திருப்பதி ஏழுமலையான் கோயில் மார்ச் 3ல் 10 மணிநேரம் மூடப்படும்:




*இந்த ஆண்டின் முதல் சந்திரகிரகணம் மார்ச் 3ல் நிகழ்கிறது. அன்று திருப்பதி ஏழுமலையான் கோயில் 10 மணி நேரம் மூடப்படும் என்று திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது. இதுகுறித்து திருப்பதி-திருமலை தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அறிக்கை: இந்த ஆண்டின் முதல் சந்திர கிரகணம் வரும் மார்ச் 3ம்தேதி நிகழ்கிறது. அன்று திருப்பதி ஏழுமலையான் கோயில் 10 மணி நேரத்திற்கும் மேலாக மூடப்பட உள்ளது. சந்திர கிரகணம் மார்ச் 3ம்தேதி பிற்பகல் 3.20 மணி முதல் மாலை 6.47 மணி வரை சுமார் மூன்றரை மணி நேரம் நீடிக்கும். எனவே கிரகணத்திற்கு 6 மணி நேரத்திற்கு முன்பு கோயில் கதவுகளை மூடுவது வழக்கம்.*

*அவ்வாறு கிரகணத்தன்று காலை 9 மணி முதல் இரவு 7.30 மணி வரை ஏழுமலையான் கோயில் கதவுகள் மூடப்பட்டிருக்கும். இரவு 8.30 மணிக்கு பிறகு சுத்தம் செய்த பிறகு பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள். சந்திர கிரகணத்தை முன்னிட்டு, அஷ்டதள பத்மாராதன சேவை, கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, அர்ஜித பிரம்மோற்சவம் மற்றும் சஹஸ்ர தீப அலங்கார சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நேற்று 85,179 பக்தர்கள் தரிசனம் செய்தனர். 18,831 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். உண்டியலில் ரூ.4.79 கோடி காணிக்கை கிடைத்துள்ளது. இன்று காலை வைகுண்டம் கியூ காம்பளக்சில் உள்ள அறைகள் முழுவதும் நிரம்பியுள்ளது. இதில் உள்ள பக்தர்கள் சுமார் 10 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்கின்றனர். ரூ.300 டிக்கெட் பெற்ற பக்தர்கள் 3 மணி நேரத்தில் தரிசனம் செய்தனர். (ஐ)*



# பெண்கள் இடையே அதிகரித்து வரும் நுரையீரல் புற்றுநோய்



நுரையீரல்புற்றுநோய்என்பது நுரையீரலில்தொடங்கும் ஒரு வகை புற்றுநோயாகும். புகைபிடித்தல் மற்றும் புகையிலை பயன்பாடு இதற்கு முக்கிய காரணங்களாகும். மரபணு மாற்றங்கள் அல்லது ஏற்கனவே இருக்கும் நுரையீரல் நோய்கள் போன்ற பிற காரணிகளும் சில சமயங்களில் நுரையீரல் புற்றுநோய்க்கு வழிவகுக்கும். உலகளவில் நுரையீரல் புற்றுநோய் இரண்டாவது அதிகம் பரவும் புற்றுநோயாக உள்ளது.

அத்துடன் புற்றுநோய் மரணங்களில் நுரையீரல் புற்றுநோய் முதலிடத்தில் இருப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தரவுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டு மட்டும் 18 லட்சம் உயிரிழப்புகள் நுரையீரல் புற்றுநோயால் ஏற்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றது. இதில் 85 சதவீதம் புற்றுநோய் பாதிப்பிற்கு புகைப்பிடிப்பதே காரணம் என்பதும் தெரியவந்துள்ளது. குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் 10 பேரில் 7 பேருக்கு புகைபிடிப்பதால் இந்த நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகிறது.

மேலும் புகைபிடிப்பவர்களை தவிர காற்று மாசுபாடு, மரபணு மாற்றங்கள் மற்றும் சில நுரையீரல் தொடர்பான நோய்கள் ஆகியவை நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்தும் பிற காரணிகளாகும். இதனை தவிர கட்டுமானம் ரூ சுரங்கங்களில் வேலைகளில், கப்பல் கட்டும் வேலைகளில் இருக்கும் மக்களுக்கு கல்நார் மற்றும் சிலிக்கா காரணத்தினால் இந்த புற்றுநோய் ஏற்படுகிறது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்துடன் வாழ்க்கை முறை காரணிகள் மற்றும் இணை நோய்கள்மறைமுகமாக நுரையீரல்புற்றுநோயை அதிகரிக்கும் அபாயத்திற்கு கொண்டுபோய்விடும். மோசமான உணவு, உடல் செயல்பாடு இல்லாமை, உடல் பருமன், மற்றும் நாள்பட்ட வீக்கம் புற்றுநோய் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்கக்கூடிய பிற உடல்நலப் பிரச்சினைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், முன்பே இருக்கும் நுரையீரலின் நிலைமை அல்லது கடுமையான சுவாச நோய்த்தொற்றுகளின் வரலாறு இந்த பாதிப்பை அதிகரிக்கும். சில ஆண்டுகள் முன்னர் வரை ஆண்களிடயே அதிகரித்து வந்த இந்த புற்றுநோய் சமீப காலமாக பெண்களிடயே அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நுரையீரல் புற்றுநோய்க்கு புகை பழக்கம் முக்கிய காரணமாக உள்ளது. இதனை தவிர நுரையீரல் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிப்பதில் சுற்றுச்சூழல் காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. காற்று மாசுபாடு நுரையீரல் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கும். வாகனம், தொழிற்சாலைகளில் இருந்து வரும் துகள்கள் நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்தும். மரம் அல்லது எண்ணெயை எரிப்பதால் ஏற்படும் புகை, நார், டீசல் வெளியேற்றம், ஆர்சனிக், காட்மியம், குரோமியம் மற்றும் சிலிக்கா ஆகியவையும் நுரையீரல் புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கும்.

ஆண்களை விட தற்போது பெண்கள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். முக்கிய காரணம் பெண்களிடையே அதிகரிக்கும் புகைபிடிக்கும் பழக்கம். குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்த பழக்கம் பெண்களிடையே தொடங்கியது. இதனால்தான் இப்போது இளம் பெண்கள் நுரையீரல் புற்றுநோயால் அவதிக்குள்ளகின்றனர். அத்துடன் புகைபிடிக்கும் பழக்கம் இல்லாத பெண்கள் இருந்தாலும் அவர்களும் பாதிக்கப்படுகின்றனர். அதற்கு காரணம் பொது இடங்களில் அவர்கள் புகை பிடிப்பவரின் அருகில் நிற்பது. அவர்களுடன் பழுகுவது ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றனர். அது மட்டுமின்றி காற்று மாசு, சமையல் புகை மற்றும் மரபணு மாற்றங்கள் போன்ற காரணங்களாலும் இது ஏற்படுகிறது. எனவே பொது இடங்களில் முககவசம் அணிவது முக்கியமாக கருதப்படுகிறது.

தற்போது ஏஐ பயன்பாடு அதிகரித்து வருகிறது. அது புற்றுநோய் கண்டறிதலில் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. குறிப்பாக சொல்லவேண்டும் என்றால் நுரையீரல் புற்றுநோய்க்கு பல்வேறு விதமான ஸ்கேன் செய்வார்கள். அந்த ஸ்கேன் செய்யும் போது பாதிப்பு எங்கு உள்ளது, எந்த அளவு உள்ளது என்பதை தெளிவாக பார்க்க முடியும் அதுமட்டுமின்றி புகைப்பழக்கம் இருந்து புற்றுநோய் இல்லாதவர்களுக்கு வர வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் பரிசோதிக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் முழுவதும் உலகளாவிய அளவில்நுரையீரல்புற்றுநோய்விழிப்புணர்வு மாதம் அனுசரிக்கப்படுகிறது. நுரையீரல் புற்றுநோய் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பது, புகைப்பழக்கத்தை நிறுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது, ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன் மூலம் உயிர் பிழைப்பு விகிதத்தை உயர்த்த முடியும் என்பதை எடுத்துரைப்பது, நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும்அவர்களது குடும்பத்தினருக்கு ஆதரவு தெரிவிப்பது உள்ளிட்ட காரணத்தால் இது அனுசரிக்கப்படுகிறது.

நீண்ட நாட்கள் இருமல் அல்லது இருமல் மாறுபாடு, இருமும் போது ரத்தம் வருவது, மூச்சுத் திணறல், நெஞ்சு வலி, எடை இழப்பு, பசியின்மை, தொடர்ந்து சோர்வு தோள்பட்டை வலி, விழுங்குவதில் சிரமம் உள்ளிட்டவை இருந்தால் பொதுமக்கள் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும்.



புகைப்பழக்கத்தை ((சிகரெட், பீடி, ஹுக்கா, ஈ-சிகரெட்) முழுவதும் நிறுத்த வேண்டும், பிறர் புகைக்கும் இடத்தில் இருக்க கூடாது, விறகு, சுள்ளி, மண்ணெண்ணை அடுப்பை தவிர்த்து சமையலறையில் சிம்னி அல்லது எக்ஸாஸ்ட் ஃபேன் கட்டாயம் பயன்படுத்த வேண்டும், தினமும் பழங்கள் ரூ காய்கறிகள் சாப்பிட வேண்டும், வாரத்தில் குறைந்தது 150 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும், 50 வயதுக்கு மேல் நீண்டகால புகைப்பழக்கம் இருந்தால் மருத்துவரிடம் சிடி ஸ்கேன் பற்றி கேட்டுப் பரிசோதனை செய்ய வேண்டும்.

ஈ-சிகரெட் (e-cigarette) அல்லது வேப் (எயிபைெ) செய்வதால் நுரையீரல் புற்றுநோய் வர வாய்ப்பு உள்ளது. ஆனால் இது பாரம்பரிய சிகரெட்டை விட குறைவான அபாயம் கொண்டது என்று தற்போதைய அறிவியல் ஆதாரங்கள் கூறுகின்றன.

# அமெரிக்க ராணுவத்தால் கைது செய்யப்பட்ட வெனிசுலா அதிபர் மதுரோ நியூயார்க் நீதிமன்றத்தில் ஆஜர்: போதைப் பொருள் கடத்தல் வழக்கில் விசாரணை



அமெரிக்க ராணுவத்தால் கைது செய்யப்பட்டு பதவியிழந்த வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா புளோரஸ் இருவரும் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் முதல் முறையாக நியூயார்க் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அமெரிக்காவில் சட்டவிரோதமாக போதைப்பொருள் கடத்தலை ஊக்குவித்ததாக வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ மீது குற்றம்சாட்டி, கடந்த 3ம் தேதி அமெரிக்க ராணுவம் அந்நாட்டின் மீது திடீர் தாக்குதல் நடத்தியது. இதில், அதிபர் மதுரோவையும், அவரது மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க படையால் கைது செய்யப்பட்டு ரகசியமாக நாடு கடத்தப்பட்டனர். நியூயார்க் அழைத்து வரப்பட்ட இவர்கள் புரூக்ளின் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், அதிபர் மதுரோ, அவரது மனைவி மீதான போதைப் பொருள் கடத்தல் வழக்கு நியூயார்க் தெற்கு மாவட்ட பெடரல் நீதிமன்றத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று பிற்பகல் 12 மணிக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டது. இதற்காக மதுரோ, புளோரஸ் இருவரும் சிறையிலிருந்து மன்ஹாட்டனில் உள்ள நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர். இந்தவழக்கில், வேறொரு நாட்டின் தலைவரான தனக்கு எதிராக வழக்கு தொடருவதில் இருந்து விலக்கு உண்டு என மதுரோ தரப்பில் வாதாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1990ல் ராணுவ நடவடிக்கை மூலம் அமெரிக்காவால் கைது செய்யப்பட்ட பனாமா சர்வாதிகாரி மானுவல் நோரிகா இதே போன்ற வாதத்தை முன்வைத்து தோல்வி அடைந்தார்.

ஆனால், மதுரோவை பொறுத்த வரை 2024ல் அவர் வெற்றி பெற்ற அதிபர் தேர்தலை முறையான தேர்தலாக அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை. எனவே இது மதுரோவுக்கு சிக்கலை ஏற்படுத்தக் கூடும். முன்னதாக நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட 25 பக்க குற்றப்பத்திரிகையில் மதுரோ மற்றும் பிறர் போதைப்பொருள் கும்பல்களுடன் இணைந்து ஆயிரக்கணக்கான டன் கொகனை அமெரிக்காவிற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதில் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால், மதுரோவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம்.

மதுரோவுக்கு பிறகு அவரது துணை அதிபரான டெல்சி ரோட்ரிக்ஸ் வெனிசுலாவின் புதிய இடைக்கால அதிபராக பொறுப்பேற்றுள்ளார். நேற்று முன் தினம் வரையிலும் நாட்டின் ஒரே அதிபர் மதுரோ மட்டுமே, அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணிய மாட்டேன் என பேசி வந்த ரோட்ரிக்ஸ் திடீரென அமெரிக்காவுக்கு பணிந்துள்ளார். நேற்று முன்தினம் மாலையில் தனது சமூக ஊடக பதிவில் ரோட்ரிக்ஸ், அமெரிக்காவிற்கும் வெனிசுலாவிற்கும் இடையே சமநிலையான மற்றும் மரியாதைக்குரிய உறவை நோக்கி நகர்வதை முன்னுரிமையாகக் கருதுவதாக கூறி உள்ளார். வளர்ச்சியை நோக்கிய ஒத்துழைப்புக்கான செயல்திட்டத்தில் இணைந்து செயல்படுமாறு அமெரிக்காவுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)




# வங்கதேசத்தில் தொடரும் அட்டூழியம்: ஹிந்து பெண் பலாத்காரம் தலைமுடியை வெட்டிய கும்பல்

வங்கதேசத்தில் ஹிந்து விதவை பெண்ணை, இருவர் பாலியல் துன்புறுத்தல் செய்ததுடன், மரத்தில் கட்டிப்போட்டு அவரின் தலை முடியை வெட்டி துன்புறுத்தினர்.

நம் அண்டை நாடான வங்கதேசத்தில், நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு கடந்தாண்டு பொறுப்பேற்றது. அது முதல், அந்நாட்டில் ஹிந்து மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

சமீப காலமாக இத்தாக்குதல்கள் மிக கொடூரமாக மாறியுள்ளது. ஹிந்துக்கள் மீதான இந்த வன்முறைகளை இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் யூனுஸ் கண்டும் காணாதது போல் இருந்து வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக, வங்கதேசத்தின் மத்திய பகுதியில் உள்ள ஜெனைதா மாவட்டத்தின் காளிகஞ்சில், 40 வயது மதிக்கத்தக்க ஹிந்து விதவை பெண் ஒருவரை இரண்டு பேர் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். அத்துடன் நிற்காமல் அப்பெண்ணை மரத்தில் கட்டி வைத்து அவரின் தலை முடியை வெட்டியுள்ளனர்.

இது குறித்து அப்பெண் போலீசில் புகார் தெரிவித்துள்ளார். அவரின் புகாரில் தெரிவித்திருப்பதாவது:

இரண்டரை ஆண்டுகளுக்கு முன் காளிகஞ்சில் ஷாஹின் மற்றும் அவரது சகோதரியிடம் இருந்து இரண்டு மாடி வீடுகளுடன், மூன்று சென்ட் நிலம் வாங்கினேன். அதன் பின், ஷாஹின் என்னிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்றார். இதற்கு நான் மறுப்பு தெரிவித்ததால் தொடர்ந்து என்னை துன்புறுத்த துவங்கினார்.

இந்நிலையில், கடந்த வாரம் என் வீட்டில் அத்துமீறி நுழைந்த ஷாஹினும், அவரது கூட்டாளி ஹசனும் என்னை பாலியல் வன்கொடுமை செய்தனர். மேலும், என்னிடம் பணம் கேட்டு மிரட்டினர். நான் பணம் கொடுக்க மறுத்ததால் என்னை மரத்தில் கட்டிப்போட்டு, என் முடியை வெட்டினர். மேலும் என்னை சித்ரவதை செய்ததால் நான் மயக்கமானேன்.

என்னை அங்குள்ள மக்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இதை தங்கள் மொபைல் போனில் வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் பரப்பினர். இவ்வாறு அவர் புகாரில் கூறியுள்ளார்.

புகாரை பதிவு செய்த போலீசார் உரிய நடவடிக்கை எடுப்பதாக அப்பெண்ணிற்கு உறுதியளித்துள்ளனர். மேலும், அப்பெண்ணிற்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில், அவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# டிரம்ப்பின் அடுத்த குறி கிரீன்லாந்து? உலக நாடுகள் பெரும் அதிர்ச்சி



வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோவை அமெரிக்க ராணுவம் அதிரடியாகக் கைது செய்து, அந்நாட்டைத் தற்காலிகமாகத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது. தற்போது அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அடுத்த குறி கிரீன்லாந்து தீவாக இருக்கலாம் என்ற கருத்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்றது முதலே டென்மார்க்கின் தன்னாட்சி பெற்ற பகுதியான கிரீன்லாந்து தீவை விலைக்கு வாங்கத் தொடர்ந்து விருப்பம் தெரிவித்து வருகிறார். கடந்த டிசம்பர் மாதம் கிரீன்லாந்துக்கான சிறப்புத் தூதராக லூசியானா கவர்னர் ஜெப் லேண்ட்ரியை டிரம்ப் நியமித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த 4ஆம் தேதி பத்திரிகை ஒன்றுக்கு டிரம்ப் அளித்த பேட்டியில், ‘எங்களுக்கு கிரீன்லாந்து கண்டிப்பாகத் தேவை, பாதுகாப்பு காரணங்களுக்காக அதை எடுத்துக்கொள்வோம்’ எனக் கூறியிருந்தார். இது உலக நாடுகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் டென்மார்க் பிரதமர் மெட்டே ப்ரெட்ரிக்சன், ‘அமெரிக்காவின் இந்தச் செயல் அபத்தமானது மற்றும் அர்த்தமற்றது. கிரீன்லாந்து விற்பனைக்கு அல்ல் நேச நாடாகத் திகழும் எங்களை மிரட்டுவதை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டும். மேலும், கிரீன்லாந்து ஏற்கனவே நேட்டோ அமைப்பில் உள்ளதால், அமெரிக்காவிற்குப் போதுமான பாதுகாப்பு உள்ளது’ என்றார். (ஐ)

# ஆயுதம் ஏந்தவும் தயார் டிரம்ப் அச்சுறுத்தலுக்கு கொலம்பியா அதிபர் பெட்ரோ பதிலடி



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு, ‘ஆயுதங்களை ஏந்துவேன்’ என்று கொலம்பிய அதிபர் குஸ்டாவோ பெட்ரோ தெரிவித்துள்ளார்.

அதிபர் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட வெனிசுலாவில் அமெரிக்க ராணுவ நடவடிக்கையை குறிப்பிட்டு கொலம்பியாவுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்து இருந்தார். அவர் கொலம்பியா அதிபர் பெட்ரோ நோய்வாய்ப்பட்டவர். அவருக்கு கோகைன் தயாரித்து அமெரிக்காவில் விற்பனை செய்வது பிடிக்கும். அவர் அதை நீண்ட காலம் செய்ய முடியாது எனவும் கூறியிருந்தார்.

இந்நிலையில், அதிபர் டிரம்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில், கொலம்பியா அதிபர் குஸ்டாவோ பெட்ரோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நான் மீண்டும் ஒரு ஆயுதத்தைத் தொட மாட்டேன் என்று சபதம் செய்தேன், ஆனால் தாய்நாட்டிற்காக, நான் மீண்டும் ஆயுதம் ஏந்துவேன். டிரம்பின் சட்டவிரோத அச்சுறுத்தலின் உண்மையான நோக்கத்தை நான் புரிந்து கொண்ட பிறகு அவருக்கு பதில் அளிப்பேன்.

கொலம்பியா அரசியலமைப்பைப் படிக்குமாறு நான் அவரை வலியுறுத்துகிறேன். அமெரிக்காவிற்கும் கொலம்பியாவிற்கும் இடையிலான உறவுகளில் முறிவை அவர்கள் விரும்புகிறார்கள். நீங்கள் என்னை கைது செய்தால், எனது மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். எனக்கு இனி தேவையில்லை. நான் சட்டவிரோதமானவன் அல்ல.

போதைப்பொருள் கடத்தல்காரனும் அல்ல. எனது ஒரே சொத்து எனது குடும்ப வீடு, அதை நான் இன்னும் எனது சம்பளத்தில் செலுத்துகிறேன். எனது வங்கி கணக்கு விவரங்களை வெளியிட்டுள்ளேன். எனது சம்பளத்தை விட அதிகமாக நான் செலவு செய்துள்ளேன் என்று யாராலும் சொல்ல முடியவில்லை. நான் பேராசை கொண்டவன் அல்ல. எனது மக்கள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. இவ்வாறு பெட்ரோ கூறியுள்ளார். (ஐ)

## சந்தேகத்துக்கிடமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றில் தொழிலாளர்கள் ஐவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் இன்று காலை பதிவாகியுள்ளது.

இவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு மதுபானம் எனக் கருதப்படும் திரவத்தை உட்கொண்டுள்ளனர்.

அதன் பின்னர் அடிக்கடி அவர்களுக்கு உடல்நலக் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன.

அவர்களில் இருவர் இன்று காலை தொழிற்சாலையில் உள்ள அறை ஒன்றில் உயிரிழந்த கிடந்த நிலையில், மேலும் மூவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தொழிற்சாலைக்கு அருகிலுள்ள மற்றொரு வீட்டில் இருந்த ஒருவரும் இன்று காலை மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை அதே பகுதியில் உள்ள வாகனம் பழுது பார்க்கும் கடை ஒன்றில் மேலும் மூன்று பேருக்கு நோய் அறிகுறிகள் வெளிப்பட்டன என்றும், அவர்கள் மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது இருவர் பின்னர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

வென்னப்புவ பொலிஸார் இந்த உயிரிழப்புக்கள் குறித்து மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, தற்போது சட்டவிரோத மதுபானம் அருந்தியதே இந்த உயிரிழப்புக்களுக்கு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

## குடும்பத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜயஷானி பிரதீப்பிரிய ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் விசாரணைகளின்படி, உயிரிழந்த நபர் அடிக்கடி மது அருந்திவிட்டு தனது மனைவிக்குத் துன்புறுத்தல் கொடுத்து வந்துள்ளார். இது தொடர்பாக ஏற்கனவே பல தடவைகள் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகராறுகள் காரணமாக, மேற்படி மனைவி தனது மூன்று பிள்ளைகளுடன் படிகாரமடுவ பகுதியில் உள்ள அவரது தாயாரின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இன்று அதிகாலை 2 மணியளவில் அந்த வீட்டுக்குள் நுழைந்த கணவர், அங்கிருந்தவர்கள் மீது பெற்றோல் ஊற்றித் தீ வைத்துள்ளார்.

தீ பரவிய வேளையில் வீட்டினுள் மனைவி, அவரது தாயார் மற்றும் இரு மகள்கள் இருந்துள்ளனர். அந்த நேரத்தில் வீட்டுக்கு வெளியே இருந்த 20 வயதுடைய மகன், தீப்பிழம்புகளுக்கு மத்தியில் தனது தாய் மற்றும் சகோதரிகளைக் காப்பாற்றப் போராடியபோது அவரும் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தீ வைத்தவரும், அவரது 13 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த நிலையில் தீ வைத்தவரின் மனைவி பிரபாஷா சந்தமாலி (வயது 36), மனைவியின் தாயார் கமலாவதி (வயது 66 - ஓய்வுபெற்ற ஆசிரியை), 15 வயதுடைய மூத்த மகள், 20 வயதுடைய மகன் ஆகியோர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும், மனைவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலென்பிந்துனுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கமையவே எமது செயற்பாடு இடம்பெறும். மக்களுக்குத் துளியளவும் துரோகம் இழைக்காத வகையில் அரசின் பயணம் தொடரும்.

கல்வி மறுசீரமைப்பு என்பது காலத்தின் கட்டாய தேவையாகும். எனவே, இந்த விடயத்தில் குறுகிய நோக்கில் அரசியல் நடத்துவதற்கு எவரும் முற்படக்கூடாது.

நாட்டுக்குப் பொருத்தமான கல்வி முறைமையை உருவாக்குவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

கல்வி மறுசீரமைப்பு விடயத்தில் பிரதமரை இலக்கு வைத்து போலித் தகவல்களைப் பரப்புவதற்குச் சிலர் முற்படுகின்றனர். ஆளுங்கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தவும் முற்படுகின்றனர். ஆனால், எதிரணியின் கனவு பலிக்காது.

பிரதமர் பதவி விலக வேண்டிய தேவை எழவில்லை. அவர் பதவி விலகவும் மாட்டார்." - என்றார்.

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நவீன் திஸாநாயக்க, பின்னர் அந்தப் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இந்நிலையிலேயே அவருக்குக் கட்சியில் தற்போது புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

காமினி திஸாநாயக்கவின் மகனே நவீன் திஸநாயக்க என்பது குறிப்பிடத்தக்கது.

## எடுக்காதே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஈடுபட்டனர்.

பொகவந்தலாவை வர்த்தக நிலையங்களில் உள்ள அனைத்து வர்த்த நிலையங்களையும் மூடி இந்த ஆர்ப்பாட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

இதில் சுமார் 200 பேர் கலந்துகொண்டனர். ஒரு மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொகவந்தலாவை பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் பிரதான நகரம் ஊடாக செல்வகந்த சந்தி வரை சென்று மீண்டும் பேரணியாக பொகவந்தலாவை தண்டாயுதபாணி ஆலயம் முன்பாக வந்தடைந்தது.

பொகவந்தலாவை நகரப் பகுதியில் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை நோர்வூட் பிரதேச சபை சேகரிப்பதற்கு அதிகூடிய வரியைக் கோருவதாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குற்றம் சாட்டினர்.

"நகரப் பகுதியில் உள்ள சேகரிக்கப்படும் குப்பைகளுக்கும் நாம் பெறும் தண்ணீருக்கும் நோர்வூட் பிரதேச சபைக்கு நாங்கள் வருடா வருடம் வரிப்பணம் செலுத்தி வருகின்றோம். தற்போது பொகவந்தலாவை நகரில் குவியும் குப்பைகளைச் சேகரிக்க நாளாந்தம் 200 ரூபாவை மேலும் செலுத்துமாறு நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கோருகின்றார். ஆனால், நாம் ஒருபோதும் குப்பைக்கான வரிப்பணத்தைச் செலுத்தப்போவதில்லை." - என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

"எமது பிரச்சினைகள் தொடர்பாக நாட்டின் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர்.

"எடுக்காதே எடுக்காதே குப்பை வரி எடுக்காதே", "கட்டமாட்டோம் கட்டமாட்டோம் குப்பைக்கான வரியைக் கட்டமாட்டோம்", "நாங்கள் செலுத்தும் வரிக்கு என்ன பயன்", "மேலும் ஒரு வரிச் சுமையா குப்பைக்கு" போன்ற பாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

# 3 ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணம் 30 வீதம் குறைக்கப்படும்- அமைச்சர் வெளியிட்ட தகவல்!

3 ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணம் 30 வீதம் குறைக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வின் போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் கொள்கை அறிக்கைகளுக்கமைய 3 ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணம் 30 வீதம் குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அவசரப்படாதீர்கள், இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருங்கள். எங்கள் கொள்கை அறிக்கையில் 3 ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை 30 வீதம் குறைப்பதாகக் கூறப்பட்டுள்ளது- என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை- தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானம்?

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட மத்திய குழுக் கூட்டம் நாளை (07) இடம்பெறவுள்ளது.

சுகாதார சேவை மற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுகாதார அமைச்சர் உள்ளிட்ட சுகாதார அமைச்சு வழங்கிய வாக்குறுதிகளை மீறி வருவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனால் அதற்கு எதிராக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட மத்திய குழுக் கூட்டம் நாளை (07) நடைபெறவுள்ளது.

சுகாதார சேவை மற்றும் வைத்தியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தலையிடாத காரணத்தினால், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான இறுதித் தீர்மானத்தை நாளை கூடும் விசேட மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்க எதிர்பார்த்துள்ளதாக வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எச்சரிக்கையை மீறும் சுற்றுலா பயணிகள்

வெளிநாடு மற்றும் இலங்கையின் பல பகுதிகளில் இருந்து அதிகளவு சுற்றுலா பயணிகள் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரைக்கு வருகின்றனர் இவ் கடற்கரையானது பாதுகாப்பு இன்றி காணப்படுவதால் கடல் பரப்புக்குள் இறங்க வேண்டாம் என வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகள் அறிவித்துள்ளது.

இருந்தபோதும் அதை பொருட்படுத்தாமல் கடற்கரைக்கு வரும் சுற்றுலா பயணிகள் கடலுக்குள் இறங்கி நீராடுவதை காணக்கூடியதாக உள்ளது. ஞாயிற்றுக்கிழமை (4) அன்றும் அதிகளவு சுற்றுலா பயணிகள் மது போதையில் கடலின் ஆழமான பகுதிக்கு சென்று நீராடி புகைப்படங்கள் எடுத்துள்ளனர்

இதனை அவதானித்த ஊர் மக்கள் கடலின் தன்மை தொடர்பாக அவர்களுக்கு கூறிய போதும் அதை செவிமடுக்காமல் நீராடியுள்ளனர்

இச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ்க்கு அறிவித்த போது அவர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து கடலுக்குள் இறங்க வேண்டாம் என சுற்றுலா பயணிகளிடம் கூறிச் சென்றுள்ளார்

வடமராட்சி கிழக்கு கடற்கரைக்கு வரும் சுற்றுலா பயணிகளே, உங்கள் கவனத்திற்கு...

மாரி காலம் என்று அழைக்கப்படும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் இந்த காலப்பகுதியில் கடலுக்குள் நீராடுபவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன

பொலிஸார் மற்றும் கடற்தொழில் அமைச்சருடன் கலந்தாலோசித்து விட்டு கார்த்திகை மார்கழி தை மாதங்களில் கடலில் இறங்குவதற்கு தடை விதிக்கப்படும்

தாளையடி கடற்கரை பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக நாங்கள் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறோம். இரண்டு பாதுகாவலர்கள் பணி அமர்த்தப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

தாளையடி கடற்கரைக்கு வரும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு எச்சரிக்கைகளை கருத்தில் கொண்டு செயல்படுங்கள் மற்றும் உங்கள் பாதுகாப்பு கருதி புகைப்படங்கள் எடுக்கும் போது ஆழமான பகுதிகளுக்குள் செல்ல வேண்டாம். (ஐ)

# சட்டவிரோத சுறா இறைச்சி பறிமுதல்: அறுவர் கைது



வென்னப்புவவில் உள்ள வெல்லமங்கரை மீன்பிடித் துறைமுகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக அறுவடை செய்யப்பட்ட 850 கிலோ கிராம் சுறா இறைச்சியை இலங்கை கடலோர காவல்படை அதிகாரிகள் கைப்பற்றியதை அடுத்து, ஆறு மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது, பல நாள் மீன்பிடிக் கப்பலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மீன்பிடி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட சுறா இறைச்சி மற்றும் மீன்பிடி கப்பலுடன், சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக வெல்லமங்கரையில் உள்ள மீன்வள ஆய்வாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.01.2026 வெளியிடப்பெற்றது.